24.09.2025.

சி.சி.121/2022

சுபாசினி த/பெ.தட்சணாமூர்த்தி

சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

புகார் யார் எழுதினார்கள் என்றால் நான் சொல்லச்சொல்ல போலிசார் எழுதினார். புகார் கையால் எழுதப்பட்டதா அல்லது கணினிமூலம் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் புகார் கணினி மூலம் டைப் செய்யப்பட்டதாகும். புகார் காவல் நிலையத்தில் வைத்தே கணினிமூலம் டைப் செய்யப்பட்டு நான் கையெழுத் செய்தேன். புகார்கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 2 மாதம் கழித்து பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே 1ம் எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். இதற்கிடையில் போலிசார் என்னை எதுவும் விசாரணை செய்யவில்லை. புகார் தேதி 24.08.2021 தேதியாகும். மேற்படி தேதிக்கு முன்பு நான் எந்தவொரு புகாரும் கொடுக்கவில்லை.

30.08.2021ம் தேதி குடும்பத்துடன் நான் சாலை மறியல் செய்தேனா என்றால் ஆமாம். மேற்படி சாலை மறியல் செய்த சமயத்தில் செய்தியாளரிடத்தில் நான் புகார்கொடுத்து 4 மாதங்களாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினேன் என்றால் சரிதான். சிவக்குமார் என்பவர் எனது முதல் கணவர் ஆவார். செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் எனக்கும் சிவகுமாருக்கும் விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விவாகரத்திற்கு பிறகு ஒரு வாரத்திற்குள் எனக்கும் தட்சணாமூர்த்திக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கும் எனது முதல் கணவர் சிவகுமாருக்கும் மனம் ஒத்து திருமணம் செய்துகொண்டோம். எனது முதல் கணவருக்கு எதிரான விவாகரத்து வழக்கிற்குண்டா அழைப்பாணையுடன் விவாகரத்து மனு சார்வு செய்யப்பட்டதா என்றால் சரிதான். நானும் எனது முதல் கணவர் சிவகுமாருக்கு இடையில் விவாகரத்து மற்றும் விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் விவாகரத்து வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு விவாகரத்து செய்துகொண்டோம்.

மேற்படி விவாகரத்து விடுதலை பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி விடுதலை ஒப்பந்தத்தில் நானும் எனது முதல் கணவர் சிவகுமாரும் எதிர்காலத்தில் வேறு திருமணம் செய்து வாழ்ந்துகொள்ள ஒப்பப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் கணவரின் திருமணமுறிவுக்கு முன்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அவருக்கு எதிராக புகார் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கும் எனது முதல் கணவர் சிவகுமாருக்கும் இடையே ஏற்பட்ட திருமண விடுதலை ஒப்பந்தத்தில் எனது கணவரை பிடிக்காததால் விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல்தான் 2வது கணவரான தட்சணாமூர்த்தி என்பவருக்கும் எதிராக நான்தான் சேர்ந்து வாழாமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

காவல் துறையின் உதவியுடன் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 31.08.2021ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி நாளில் 1ம் எதிரி வீட்டிற்கு 10 நபர்கள் சென்றோம் என்றால் சரிதான். அன்று எனது திருமண சீர்வரிசை சாமான்களை பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன் என்றால் அனைத்து பொருட்களையும் தரவில்லை. அவ்வாறு 1ம் எதிரி திருமண சீர்வரிசை பொருட்களில் சிலவற்றை தரவில்லை என்பதை போலிசார் விசாரித்திருந்தால் நான் சொல்லியிருப்பேன். 1ம் எதிரி கைது செய்யப்பட்ட தேதியான 19.10.2021ம் தேதி நான் காவல்நிலையம் சென்றிருந்தபோது முதல் தகவல் அறிக்கையின் நகலை கையெழுத்திட்டு பெற்றக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு முதல் தகவல் அறிக்கை நகல் பெறும்போது 1ம் எதிரி திருமண சீர்வரிசை பொருட்களில் சிலவற்றை கொடுக்காததை குறித்து கேள்வி எழுப்பினேனா என்றால ் இல்லை. எனது உறவினர்களின ் பேர் காவல ் துறையில் இருக்கிறார்களா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. எனக்கு 2வது திருமணம் ஆன 2015 ஆண்டு முதல் எனது தாய்வீட்டிற்கு வந்த 2020ம் ஆண்டுவரை எதிரிகளுக்கு எதிராக எந்தவொரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

எனக்கு பெண் குழந்தை இருப்பதால் வாழக்கை பாதிக்கக்கூடாது என்பதற்காக எதிரிகளுக்கு எதிராக நான் புகார்கொடுக்காமல் இருந்தேன். எனக்கு 07.04.2017ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. எனக்ககுழந்தை பிறப்பதற்கு முன்பு எனக்கு ஏற்பட்டகொடுமைக்காக புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் எனக்கு 2வது திருமணம் என்பதால் புகார் கொடுக்கவில்லை. எனது குழந்தையின் முதல் பிறந்தநாள் பத்திரிக்கை அடித்து எனது கணவர் கொண்டாடினார் என்றால் சரிதான். அந்த பிறந்த நாள் விழா பத்திரிக்கையில் குழந்தையின் தாத்தா பாட்டி என்ற இடத்தில் எனது தாய் தந்தையரைதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ரகுவீரபாண்டி என்பவர் எனது சகோதரர் ஆவார். எனது குழந்தையின் 2வது பிறந்தநாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. அந்த பிறந்தநாள் விழாவில் என்னிடம்காட்டப்படும் புகைபடத்தில் எங்களுடன் எனது 4ம் எதிரி சரஸ்வதி அவர் கணவருடன் இருக்கிறார் என்றால் சரிதான். என் குழந்தையின் 3ம் ஆண்டு பிறந்தநாள் விழா கொண்டாடவில்லை எதிரிகள் விரட்டிவிட்டதால் அப்போது என் தாய ் வீட்டில் இருந்தேன். என்னை என் தாய்வீட்டிற்கு விரட்டிவிட்டது சம்மந்தமாக புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

என் குழந்தைக்கு குலதெய்வ கோவிலில் 2019ம் ஆண்டு மொட்டை அடித்தபோது எனது குடும்பத்தில் இருந்த எனது தாய் தந்தை மற்றும் சகோதரர் கலந்துக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எனது குழந்தையின் பள்ளி சேர்க்கைக்கான ஆவணம் என்றால் சரிதான். எனது குழந்தைக்கான கல்வி கட்டணம் செலுத்தப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என் கணவரை விட்டு 2020ஆண்டு பிரிந்ததற்கு பிறகு 2021ம் ஆண்டு 1ம் எதிரி எனக்கு எதிராக சென்னை பூந்தமல்லியில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஆனால் எனக்கு தாமதமாகதான ் தெரியவந்தது அதனால் 20.2.2024ம் தேதி நான் வழக்கறிஞருடன ் ஆஜரானேன ் அதன ் பின்னிட்டு எனக்கும ் எனது கணவருக்கும் கலந்தாய்வு 3 முறை நடைபெற்றது. மேற்படி கலந்தாய்வில் என் கணவரின் வீட்டை எனது

பெயருக்கு எழுதிகொடுத்தால்தான் சேர்ந்து வாழ்வேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. மேற்படி கலந்தாய்வில் என் கணவருக்கு 3ம் திருமணம் செய்து கொண்டு ஒரு மகன் இருக்கும் காரணத்தினால் நான் அவரோடு வாழமுடியாது என்று கூறினேன். நான் எதிரிகளுக்கு எதிராக கொடுத்த இந்த புகாரில் 1ம் எதிரி 3ம் திருமணம் செய்து கொண்டது குறித்தும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சமரச மையத்தில் நடந்த கலந்தாய்வில் இந்த வழக்கு குறித்தும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நானும் 1ம் எதிரியும் சென்னை நேதாஜி நகரில் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். 2 மற்றும் 3ம் எதிரிகள் ஒரே வீட்டில் எங்களுடன்தான் வசித்தார்கள்.

எனது குழந்தையின் பிறப்பு சான்றிதழில் செந்தமிழ் நகர், பட்டாபிராமன் தெரு சென்னை-72 உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டை என்பெயரில் எழுதிவைக்க கேட்டுதான் நான் 1ம் எதிரியை உடல்ரீதியாகவும, மனரீதியாகவும் துன்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு 2012ம் ஆண்டு முதல் முதல் கணவருடன்இருந்த காலம்முதல் எனக்கு வேறொரு நபருடன் தொடர்பு இருந்ததாகவும 'அது தற்போதுவரை நீடித்ததால்தான் 1ம் எதிரிக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரம் 1ம் எதிரிக்கு 2020ம் ஆண்டுதான் தெரியவந்தது. அதனால்தான் 1ம் எதிரி என்னுடன் சந்தோஷமாக எனது குடும்பத்தாருடன் மட்டும் சென்னையில் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு 1ம் எதிரி எனது குடும்பத்தாருடன் மட்டும் சென்னையில் வாழ்ந்து வந்ததால்தான குழந்தையின பிறந்த நாள விழா பத்திரிக்கையில எனது குடும்ப உறுப்பினர்களை மட்டும் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல 1ம் எதிரி என்னை 07.02.2020 என் வீட்டிற்கு வந்து என்னை அடித்ததாக புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிரி 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் எந்த தேதியில் என்னை வீட்டைவிட்டு விரட்டினார் என்று ஞாபகம் இல்லை. 1ம் எதிரி என்னை பிப்ரவரி மாதம் 1 முதல் 6 தேதிக்குள் வீட்டைவிட்டு விரட்டியிருப்பாரா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் எனது குழந்தைக்கான பள்ளி கல்வி கட்டண ரசீது 2.2.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதைப்பற்றி என்னிடம் கூறவில்லை. குழந்தையை பள்ளியில் சேர்த்த நாள் 12.02.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை 1ம்எதிரி 7.2.2020ம் தேதி என் வீட்டிற்கு வந்து அடித்த பிறகு மீண்டும் 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தேனா என்றால் இல்லை. 07.02.2020ம் தேதி 1ம்எதிரி என்னை அடித்த சம்பவத்திற்கு நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொல்வதுபோல் 1ம் எதிரி என்னை எந்தவித வரதட்சணை கொடுமை செய்யவில்லை என்றாலும், என்னை அடித்து துன்புறுத்தவில்லை என்றாலும் 2 முதல் 4 எதிரிகள் எங்களுடன் எந்த காலத்திலும் சேர்ந்து வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது குடும்ப உறுப்பினர்களை தவிர வேறு தனி நபர் சாட்சிகள் உள்ளார்களா என்றால் தணிகைவேலு மற்றும் சீனிவாசன் உள்ளார்கள். தணிகைவேல் எனது அண்ணன் ஆவார். சீனிவசன் எனது சித்தப்பா ஆவார். எனது குடும்பஉறவினர்களை தவிர வேறு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை.

என்னை கொடுமைபடுத்தியதாக சொல்லப்படும ் இடத்தில ் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தினை போலிசாருக்கு காண்பித்தேனா என்றால் இல்லை. 1ம் எதிரியை கைது செய்வதற்கு மட்டும் நான் போலிசாரை 1ம் எதிரியின் வீட்டிற்கு அழைத்துச்சென்றேன். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.